# சேலம் இந்தி எதிர்ப்பாளரு க்கு தண்டனை

## மறியல் வழக்குத் தீர்ப்பு

(ஒரு நிருபர்)

சேலம், ஜூலை 7-

சென்ற 4, 5 தேதிகளில் கைதியான தொண்டர்கள் தோழர்கள் பழனிசாமி, எ.வி.ராமசாமி, ஓமலூர் ரங்கசாமி, பி. சின்னண்ணன் ஆகியவர்கள் மேல் 23வது செக்ஷன் 7 (எ) பிரிவின்படி தொடரப்பட்ட வழக்கு இன்று டிப்டிகலெக்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தோழர்கள் ஓமலூர் ரங்கசாமிக்கும் பழனிசாமிக்கும் தலா 4 மாதம் கடுங்காவல் தண்டனையும் தோழர் எ. வி. ராமசாமிக்கு (minor) 2 வருஷம் தண்டனையும் விதிக்கப்பட்டது. தோழர் சின்னண்ணன் மன்னிப்பு கேட்டுக்கொண்டதின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

தோழர் ராமசாமி கோர்ட்டில் கூட 'இந்தி வீழ்க! தமிழ் வாழ்க! என்று வீரத்துடன் கோஷம் செய்ததை கோர்ட்டாரின் தீர்ப்பில் ரிக்கார்டு செய்யப்பட்டது. தண்டனையை புன்முறுவலோடு ஏற்றுக்கொண்டார்கள்.